பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை 24.11.2020 கதிர் 19

இனி அது ரகசியம் அல்ல!

நமது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சுமார் முப்பத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் - நாம் இளைஞராக இருந்த போது - நடந்த ஒரு சம்பவத்தைத் துல்லியமாகக் குறிப்பிட்டார்.

ஒரு செய்தியா பக்கம் 02

## கிளிநொச்சியில் மேலும் ஒருவருக்கு ‘கொரோனா’

கிளிநொச்சியில் 72 வயதுடைய வயோதிபர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதாரத்துறையினர் கருத்துத் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி 55ஆம் கட்டையில் உள்ள ஒயில் கடை நடத்தும் வர்த்தகர் ஒருவர் நேற்றுமுன்தினம் காய்ச்சல் காரணமாக வைத்திய பக்கம் 02

சமூகத் தொற்று அபாயத்தையடுத்து

## கிளிநொச்சி மாவட்ட சகல பாடசாலைகளும் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூடல்!

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் இன்று தொடக்கம் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றன என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் 72 வயதுடைய வயோதிபர் ஒருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து சுகாதாரத் பக்கம் 02

# ஏதோவொரு வழியில் மாவீரரை நினைவேந்தியே தீருவர் தமிழர்



## கோட்டா அரசுக்கு சம்பந்தன் சாட்டையடி

போரில் உயிர்நீத்த உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அது அவர்களின் சொந்த உரிமை. அதில் அவர்கள் ஏதோவொரு வழியில் சாதித்துக் காட்டுவார்கள். அதை ஜனாதிபதியோ அல்லது அரசோ அல்லது வேறு ஆள்களோ தடுத்து நிறுத்த முடியாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 02

## மாவீரர்களை அஞ்சலிக்க வேண்டுமெனில் வெளிநாடு செல்ல வேண்டும் தமிழ் மக்கள்

### இப்படிச் சொல்கின்றது கோட்டா அரசு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வை இலங்கையில் நடத்த நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம். தடைகளை மீறித் தமிழ் மக்கள் மாவீரர்களை இங்கு நினைவுகூர முடியாது. அவர்கள் விரும்பினால் வெளிநாடுகளுக்குச் சென்று மாவீரர்களைச் சுதந்திரமாக நினைவேந்தலாம். அங்கு அவர்களுக்குத் தடைகள் இருக்காது.

-இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

‘போரில் உயிர்நீத்த பக்கம் 02

## வடக்கில் நேற்று நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.பரிசோதனைக் கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் வடக்கு மாகாணத்தில் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். பக்கம் 02

## நேற்றும் 3 கொரோனா சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் 3 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பக்கம் 11

## வடக்குப் பாடசாலைகளில் 43 வீத மாணவரே வருகை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ. 24

கொரோனா அச்சத்தினால் மூடப்பட்ட பின்பு நேற்று மீண்டும் பாடசாலைகள் ஆரம்பித்துள்ள நிலையில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்கள் 43 வீதமும் ஆசிரியர்கள் 84 வீதமும் மட்டுமே வரவு பக்கம் 02

## சிறைக் கொத்தணியில் முதலாவது உயிரிழப்பு

### ஆயுள் தண்டனைக் கைதியே சாவு

கம்பஹா - மஹர சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆயுள் தண்டனைக் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார். பக்கம் 02

## நாட்டில் மேலும் 337 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### மொத்தப் பாதிப்பு 20,508 ஆக உயர்வு

இலங்கையில் நேற்றும் 337 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி கொரோனாவால் பாதிக்கப்பட்ட மொத்தத் பக்கம் 02

## வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளை 24 மணிநேரத்தில் சூறாவளி தாக்கலாம்!

(செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## யாழ்.பல்கலை மருத்துவபீட மாணவன் இளங்குன்றனின் மரணத்தில் சந்தேகம்

### நீதி கோரி ஜனாதிபதிக்கு சகோதரன் கடிதம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவன் சிதம்பரநாதன் இளங்குன் றனின் மரணத்தில் மிகுந்த சந்தேகம் இருப்பதால் இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு தமக்கான நீதியைப் பெற்றுத்தருமாறு அவருடைய சகோதரன் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோருக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள விடுதி பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ளனாக நான் அருகில் இருந்து பார்த்த – நேரடியாக சம்பந்தப்பட்ட – ஒரு சம்பவத்தை என் பெயரையும் நாடாளுமன்றில் குறிப்பிட்டு உரையாற்றியமையை செவிமடுத்த போது என் நினைவில் மேலதிகமாக நிழலாடிய ஒரு விடயத்தை இன்று வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

இது 1986 இல் நடந்தது. யாழ்.கோட்டை இராணுவ முகாமுக்குள் படையினரைப் புலிகள் முடக்கி வைத்திருந்தனர்.

அப்போது நடிகர் விஜேகுமாரதுங்க ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை நடத்திக் கொண்டிருந்தார் என்று நினைவு. முன்னாள் பிரதமர்கள் இருவரின் மகளும், பின்னாளில் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் கணவர் அவர். அவருக்குப் புலிகளிடம் நல்ல பெயர் இருந்தது. அதைப் பயன்படுத்தி புலிகள் வசம் கைதியாக இருந்த இரு சிப்பாய்களை விடுவிக்க அவர் முயன்றார். அதற்காக புலிகளுடன் பேச்சு நடந்த அவர் யாழ் வந்தார்.

யாழ்.கோட்டை முகாமுக்கு ஹெலியில் வந்து இறங்கிய அவர், அங்கிருந்து வெளியே வந்தார். யாழ்.கோட்டை முகாமுக்குள்ளும் சுற்றிவரவும் படையினரின் காவலரண்கள். அதற்கு நெருக்கமாக வியூகம் அமைத்து புலிகள் தமது காவலரண்களை நிறுவி யாழ்.கோட்டை முகாமை முற்றுகைக்குள் வைத்திருந்தனர்.

கோட்டை முகாமுக்கு வெளியே இராணுவக் கப்டன் கொத்தலாவுடன் வெளியே வந்த விஜய குமாரதுங்கவையும் அவரது கட்சியினர் எனக் கூறப்பட்ட மற்றைய இருவரையும் புலிகளின் தளபதி கிட்டு, திலீபன் போன்றோர் வரவேற்று, குசலம் விசாரித்தனர். அப்போது குமாரதுங்கவுடன் வந்த மற்றைய இருவரையும் கப்டன் கொத்தலாவ அறிமுகப்படுத்தினார். ஒருவர் ஒஸி அபேகுணசேகரா. குமாரதுங்கவின் கட்சியின் முக்கிய பிரமுகர்கராக அவர் ஏற்கனவே அறியப்பட்டிருந்தார். பின்னாளில் காமினி திஸநாயக்கா உயிரிழந்த குண்டுத்தாக்குதலில் கூடவே சேர்ந்து பலியானவர்களில் இவரும் ஒருவர். மற்றைவரும் குமாரதுங்கவின் கட்சிப் பிரமுகர் எனத் தெரிவித்து அறிமுகப்படுத்தப்பட்டார். அவரது பெயர் எனக்கு இப்போது நினைவில் இல்லை.

யாழ்ப்பாணம் வைமன் வீதியில் உள்ள இல்லம் ஒன்றில் கிட்டு – விஜய குமாரதுங்க பேச்சு நடைபெற்றது. அச்சமயத்தில் தளபதி கிட்டுவும், திலீபனும் எனக்கு மிகுந்த நெருக்கமான நண்பர்கள். அதனால் அந்தப் பேச்சு மேசையில் எனக்கும் சரியாசனம் தரப்பட்டது. பேச்சில் எனக்கு சம்பந்தம் ஏதுமில்லை. ஆனால் அந்த மேசையில் பக்கத்தில் இருந்து குறிப்பெடுக்கும் வாய்ப்பு எனக்கு மரியாதையுடன் தரப்பட்டது. அந்தப் பேச்சில் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்பாளராக போராளி ரஹீம் (இவர் தமிழர். யாழ்ப்பாணத்து இளைஞர், கண்டியில் கல்வி கற்றவர். மும்மொழித் தேர்ச்சி மிக்கவர். இவரும் எனது நெருங்கிய நண்பரே. இப்போதும் கனடாவில் இருக்கின்றார். எப்போதும் என் மதிப்புக்குரியவர்) செயற்பட்டார்.

கிட்டு – விஜேயகுமாரதுங்க உரையாடல் விவரத்தை அடுத்த நாள் எனது பத்திரிகையில் வார்த்தைக்கு வார்த்தை நான் வெளியிட்டேன். அந்த அறிக்கையிடலை கிட்டு மெச்சியமை பின்னர் இடம்பெற்றது.

அந்த வீட்டின் கட்டில் ஒன்றில் நடுவில் விஜயகுமாரதுங்கவுடன் நான் அமர்ந்திருந்து பேட்டி ஒன்றும் எடுத்தேன். இரு பக்கத்திலும் அன்று விடுவிக்கப்பட்ட படைச் சிப்பாய்களும் மற்றும் ஒஸி அபேகுணசேகரவும் அமர்ந்து இருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படத்தை நான் எனது நூல் ஒன்றிலும் பிரசுரித்தேன். அந்தப் படம் என்னிடம் இன்னும் உள்ளது. அது விடயமல்ல.

பேச்சு மேசையில் பல தின்பண்டங்கள் பரிமாறப்பட்டன. அதில் வடை, தயிர் வடை எல்லாம் இடம்பெற்றன. பேச்சுக்கு இடையே அந்த வடை குறித்தும் சிலாகித்தார் விஜய குமாரதுங்க. குமாரதுங்கவைக் *'சுண்டி இழுத்த யாழ்ப்பாண வடை'* என்று யாழ். பத்திரிகை ஒன்றிலும் செய்தி வெளிவந்ததாக நினைவு. அதனைத்தான் சிறீதரன் எம்.பியும் தமது நேற்றைய நாடாளுமன்ற உரையில் விவரித்தார். *"அந்த விருந்தில் நேரடியாகப் பங்குபற்றிய பத்திரிகையாளர் இன்னமும் உயிரோடு இருக்கின்றார். யாழ்.விருந்தோம்பலில் தமிழ் மக்களின் வடைக்குள்ள பங்கு அங்கு அன்று பேசப்பட்டது. அதை அந்தப் பத்திரிகையாளரிடமே நீங்கள் கேட்டுத் தெரிந்த கொள்ளலாம்."* – என்று அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்தார் சிறீதரன் எம்.பி.அதற்கு நானே சாட்சி என்ற அவரது கூற்று முற்றிலும் சரியானது.

அதையும் தாண்டி ஒரு விடயம் உண்டு.

மேசையில் விஜயகுமாரதுங்கவோடு பேசிக் கொண்டிருந்த புலிகளின் தளபதி கிட்டுவிடம் இன்னொரு போராளி ஒரு கோவையை (பைலை) கொண்டு வந்து கொடுத்தார். அதைத் திறந்து அதில் இருந்த ஓர் ஒற்றையைப் பார்த்த கிட்டுவின் முகம் ஒரு கணம் மாறிப் போனமையை நான் கவனித்தேன். ஆனால் அடுத்த கணம் அது வழமைக்குத் திரும்பிவிட்டது. சாதாரணமாகக் கிட்டு உரையாடிக்கொண்டிருந்தார்.

சுமார் ஒன்று, ஒன்றரை மணி நேரம் கழித்து எங்களிடம் எல்லாம் விடைபெற்றுக் கொண்டு விஜயகுமாரதுங்க புறப்பட்டார்.

அப்போது அவரை கிட்டு *"ஒரு நிமிடம்"* – என்று தனியே அழைத்தார்.

தனது கோவையைத் திறந்து அதில் இருந்த ஒரு தாளை விஜயகுமாரதுங்கவிடம் காட்டினார் கிட்டு. அதில் தமிழில் ஏதோ ஒரு குறிப்பு இருந்தது. அதில் எழுதப்பட்டவற்றின் சாரத்தை குமாரதுங்கவுக்கு மொழி பெயர்த்தார்கள். குமாரதுங்க ஒரு கணம் அதிர்ந்தார். எனினும், பின்னர் சமாளித்து, தலையாட்டி உடனே யாழ்.நோக்கிப் புறப்பட்டார்.

அப்படி அந்தத் தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது? அதன் வசனங்கள் வார்த்தைக்கு வார்த்தை எனக்கு நினைவில்லை. ஆனால் சாரம் நினைவில் உண்டு.

*"உங்களுடனும் ஒஸி அபேகுணசேகரவுடனும் வந்த மூன்றாவது நபர் உங்கள் கட்சியைத் சேர்ந்தவர் அல்லர். அவரின் உண்மைப் பெயர் இன்னது. பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்றவர் என்று கூறப்பட்டது.*

*"ஆனால் அவர் மறைமுகமாக இன்னமும் சேவையில் இருக்கலாம். வேவு பார்ப்பதற்காக அவரையும் சேர்த்து உங்கள் ஆளாக இங்கு அனுப்பியிருக்கின்றார்கள். எமக்கு அவர் உங்களுடன் வந்து போவதில் ஆட்சேபனை இல்லை. எங்களிடம் மறைக்க ஒன்றுமில்லை. ஆனால் எங்களது கண்களில் மண்ணைத் தூவி விட்டு வந்து போகலாம் என்று மட்டும் இராணுவ, பொலிஸ் புலனாய்வுத் தரப்பு நினைத்து விடக் கூடாது. அதற்காகத் தான் இப்போது நீங்கள் போகும் போது இதைக் கூறி வைக்கிறோம். அவரை மறிக்கவோ, தண்டிக்கவோ எமக்கு எண்ணம் இல்லை. அவரைக் கூட்டி வந்தபடி கூட்டிச் செல்லுங்கள் "*– என்று அனுப்பி வைத்தார் தளபதி கிட்டு.

விடுவிக்கப்பட்ட இரு இராணுவக் கைதிகளையும் கூட்டிக் கொண்டு குமாரதுங்க பலாலி பறந்தார்.

இதுதான் கிட்டு...!

– மின்னல் –

## மாவீரர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அது அவர்களின் சொந்த உரிமை. அதில் அவர்கள் ஏதோவொரு வழியில் சாதித்துக் காட்டுவார்கள். அதை ஜனாதிபதியோ அல்லது அரசோ அல்லது வேறு ஆட்களோ தடுத்து நிறுத்த முடியாது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் தினேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் அடைக்கலம் கோரி அங்கு வாழும் சில முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோரின் தாளத்துக்கு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் மக்களும் ஆடுகின்றார்கள்.

இந்த நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். எனவே, இங்கு அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் தடை செய்திருந்தாலும் அங்கு வாழும் தமிழர்கள் மாவீரர் நாளை பகிரங்கமாக நினைவுகூருகின்றார்கள் என்பதற்காக இங்கு நாம் அனுமதி வழங்க முடியாது.

இங்கு மாவீரர் நாள் நிகழ்வை நடத்த கடந்த நல்லாட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை படுமுட்டாள்தனமாகும்.

அது ஆட்சியில் இருக்கும் தம்மைக் காப்பாற்றி வந்தமைக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரணில் அரசு வழங்கிய நன்றிக் கடனாகும்.

நாட்டின் சட்டத்தை மீறி – நீதிமன்றத் தடையுத்தரவுகளை மீறி மரணித்த விடுதலைப்புலிகளை நினைவு கூருவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் – என்றார்.

## கிளிநொச்சியில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்குக் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவரது மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

அத்துடன், அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டது. அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் கிளிநொச்சியில் அண்மைய நாட்களில் நடமாடிய இடங்கள் மற்றும் தொடர்புகொண்டவர்களைக் கண்டறிவதில் சிக்கல் உண்டு. அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதனால் அவரது கடைக்கு அண்மையாக உள்ள கடைகளை மூடி தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அத்துடன் பாடசாலைகளை மூடுமாறும் கேட்டுள்ளோம் – என்றனர்.

## கிளிநொச்சி மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துறையின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகரான குறித்த வயோதிபருக்குக் கொரோனா எப்படி தொற்றியது எனச் சுகாதாரத்துறையினரால் கண்டறியப்படாத நிலையில், சமூகத் தொற்று ஏற்படக்கூடிய அபாயம் காரணமாகவே பாடசாலைகளைத் தற்காலிகமாக மூடும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றில் தங்கி நின்ற நிலையில் மருத்துவ பீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் (வயது 23) சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இம்மரணத்தில் தமக்கு மிகுந்த சந்தேகம் இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள அவரின் சகோதரன், இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரட்ண மற்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஆகியோருக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

எனது சகோதரனின் திடீர் மரணத்தில் மிகுந்த சந்தேகம் இருக்கின்றது. பொலிஸார் இந்த மரணத்தை தற்கொலை எனும் ரீதியில் விசாரணை மேற்கொண்டுள்ளமை எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவ்விடயத்தைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பாரப்படுத்தி உரிய விசாரணைகளை மேற்கொண்டு எமக்கான நீதியைப் பெற்றுத் தருமாறும், இனி வரும் காலங்களில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு ஆவன செய்யுமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

## சிறைக் கொத்தணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

82 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு புற்றுநோயும் இருந்துள்ளது.

இந்தநிலையில் இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிறையிலிருந்த நிலையில் உயிரிழந்த முதலாவது உயிரிழப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 322 பேரின் மாதிரிகள் கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும், முல்லைத்தீவில் விமானப் படையின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருக்கும் 2 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## ஏதோவொரு வழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும் வரை, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது' என ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட சபையில் நடைபெற்ற வரவு – செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போரில் உயிர்நீத்த தமது பிள்ளைகளுக் கும் சகோதரர்களுக்கும் உறவுகளுக்கும் தமிழ் மக்கள் தங்கள் அஞ்சலியைத் தெரிவிப்பது அவர்களின் சொந்த உரிமை. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதிக்கோ அல்லது அவர் தலைமையிலான அரசுக்கோ எந்த அதிகாரமும் இல்லை.

நாட்டில் இந்தப் பிரச்சினைகள் உருவாகுவதற்கு அரசே காரணம். உலகத் தலைவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தால் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் உச்சநிலையை அடைய வேண்டிய வாய்ப்பு இருந்திருக்கவே மாட்டாது.

இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கின்றவர்கள், தமிழ் மக்கள் தங்களுடைய வேதனைகளையும் அஞ்சலிகளையும் வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு – சமய வழிபாடுகளில் ஈடுபடுவதற்குத் தடைகளைப் போடுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்ல.

உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அது அவர்களின் சொந்த உரிமை. அதில் அவர்கள் ஏதோவொரு வழியில் சாதித்துக் காட்டுவார்கள். அதை ஜனாதிபதியோ அல்லது அரசோ அல்லது வேறு ஆட்களோ தடுத்து நிறுத்த முடியாது – என்றார்.

## நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 508 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 5 ஆயிரத்து 921 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 14 ஆயிரத்து 497 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

## வடக்குப் பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டத்தின் 12 கல்வி வலயங்களிலும் உள்ள மாகாணப் பாடசாலைகளில் தரம் 6 முதல் உயர்தரம் வரையில் மொத்தமாக ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 855 மாணவர்கள் கல்வி கற்கும்போதும் நேற்றைய தினம் 61 ஆயிரத்து 601 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு வருகை தந்தனர்.

இதேபோன்று குறித்த பாடசாலைகளில் 16 ஆயிரத்து 64 ஆசிரியர்கள் பணியில் உள்ள நிலையில் நேற்றைய தினம் 13 ஆயிரத்து 434 பேர் கடமைக்கு சமுகமளித்திருந்தனர்.

இருந்தபோதும் நீண்ட இடைவெளியின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பித்தமையினால் பாடசலையைத் துப்புரவு செய்யும் பணியே நேற்று இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் போதிய பாதுகாப்பின்மையே மாணவர் வரவு குறைவுக்கான காரணமாகும்!

## என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, நவ.24

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் இன்றையதினம் 5 சதவீதத்துக்கும் 10 சதவீதத்துக்கும் இடையிலான மாணவர்களே வருகை தந்துள்ளனர். பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளமையே இதற்குக் காரணமாகும் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அதிகாரத்துக்கு கீழ் இருக்கும் நிறுவனங்ளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று மேல்மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் உள்ள பாடசாலைகளைத் தவிர்ந்த நாடு முழுவதும் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. கண்டி தர்மராஜ வித்தியாலயத்தில் 4 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்ற சூழலில் 75 பேர்தான் பாடசாலைக்கு வந்துள்ளனர். முழு கண்டி மாவட்டத்திலும் உள்ள பாடசாலைகளில் 5 சதவீதத்துக்கும் 10 சதவீதத்துக்கும் இடையிலான மாணவர்களே வருகை தந்துள்ளனர். பாடசாலைகளில் பாதுகாப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளமை



இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் 60 பாடசாலைகளுக்கு ஒரு சுகாதாரப் பரிசோதகர்தான் உள்ளார். மாகாணசபை இல்லாதபடியால் ஆளுநர் ஊடாக தற்காலிகமாகவேனும் சுகாதாரப் பரிசோதகர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று தனிமைப்படுத்தல் ஊரங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மேலும் 5ஆயிரம் ரூபாவை வழங்குமாறு வேண்டுகோள் விடுகிறோம். தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்களால் எவ்வித பணிகளையும் செய்ய முடியாதுள்ளது. வெளியிலும் செல்ல முடியாது. வாழ்வதற்கு வழிமுறையொன்று இல்லாதுள்ளனர். ஆகவே, அவர்களுக்கு மேலும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.– என்றார்.

# அனர்த்தம் ஏற்படுமாயின் அதை எதிர்கொள்ள தயார்!

## யாழ்.அரச அதிபர் உறுதி

யாழ் மாவட்டத்தில் தாழமுக்கத்தால் ஏதாவது அனர்த்தம் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவபிரிவு தயார் நிலையில் உள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்போது தாழமுக்கம் காரணமாக விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவுறுத்தல் ஒன்று கிடைத்திருக்கின்றது. நேற்றுமுன்தினம் தொடக்கம் இன்றும் நாளையும் வரை அவதானமாக மீனவர்களை கடலுக்குச் செல்லும் படியும் அதே நேரத்தில் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் சற்று உக்கிரமடைந்து புயலாக மாறகூடிய நிலை காணப்படுவதால் அவதானமாகச் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இன்றும் நாளையும் 100 – 150 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும், கடும் காற்று வீசும் எனவும் இன்றும் நாளையும் வடக்கு மாகாணத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மிக அவதானமாகத் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம். அனர்த்த முகாமைத்துவப் பிரிவினுடைய அறிவுறுத்தலையும் வளிமண்டலத் திணைக்களத்தினுடைய அறிவுறுத்தலையும் பின்பற்றித் தங்களுடைய கடற்தொழில் செயற்பாடுகளை செயற்படுத்தப்படுத்தல் வேண்டும்.

கடல் குழப்பமாக இருப்பதால் குறிப்பாக நெடுந்தீவுக்கான கடல் பயணமும் கடல் குழப்பம், கடும் காற்றின் காரணமாக தடைப்பட்டிருப்பதாக பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், படகுப் போக்குவரத்தை, நிலைமையை அனுசரித்து செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

மேலும், பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் வகுப்பறையில் மாணவர்கள் பேண வேண்டிய சுகாதார நடைமுறை விடயங்கள் தொடர்பிலும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் விரிவான நடைமுறை வழிகாட்டல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதன்படி வகுப்பறையில் மாணவர்களை 50 சதவீதமான அளவுக்கு அனுமதித்து பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியும். அதேபோல மாணவர்களுடைய போக்குவரத்து மற்றும் இதர விடயங்களில் அவதானமாக இருக்கும் படியும் அவர் கோரியுள்ளார். எனவே அதனைப்பின்பற்றி பாடசாலைநிர்வாகத்தினர் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளைத் தொடரமுடியும். அதேபோல நேற்று பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் மற்றும் உள்ளூர் போக்குவரத்துக்கள் வழமைபோல் இடம்பெறுகின்றன. மக்கள் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துகொள்ள வேண்டும். சுகாதார நடைமுறைகளையும் சமூக இடைவெளி, முககவசம் போன்றவற்றையும் கவனத்தில் எடுத்தல் அவசியமாகும்.

யாழ். மாவட்டத்தினுடைய பாதுகாப்பு பொதுமக்களின் கைகளில்தான் இருக்கின்றது. சுகாதார பிரிவினரால் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா? என சோதிக்க மட்டுமே முடியும். எனவே பொதுமக்கள் இந்த விடயங்களைக் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும்.

எனவே இனி மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், நுளம்பு பெருகும் இடங்களை அகற்றி மற்றும் பொதுமக்கள் நுளம்பு பரவல் ஏற்படாவண்ணம் தங்களையும் சூழலையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# அரசின் செயற்பாடுகளினால் மகாசங்கம் அதிருப்தியில்!

## ராஜித சேனாரத்ன சாடல்



நல்லாட்சி அரசாங்கத்தை தோல்வியடைச் செய்து தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியின் அமர்த்த பௌத்த மகா சங்கத்தினர் பாரியளவில் முயற்சித்திருந்தனர். எனினும் தற்போது மகா சங்கத்தினரே அதிருப்தியடைக் கூடிய வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நல்லாட்சி அரசாங்கத்தில் பௌத்த மதகுருமார்கள் பழிவாங்கப்படுவதாகக் கூறப்பட்டது. எனினும் தற்போதைய அரசாங்கத்திலேயே அவ்வாறு இடம்பெறுகிறது. மகா சங்கத்தினராலேயே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் தற்போது அவர்களே அதிருப்தியடையும் வகையிலான செயற்பாடுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் குறைந்தளவான நிதி ஒதுக்கீட்டில் பெருமளவான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பொய்யாகும். காரணம் அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எந்த சந்தர்ப்பத்திலும் போதாது.

இது மாத்திரமன்றி வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் வியாபாரம், விபச்சாரம், ஆயுத விற்பனை என்பவற்றின் மூலம் கிடைக்கும் கறுப்பு பணத்தை நாட்டுக்கு வரவழைப்பதற்கு ஆதரிக்கும் வகையிலான முன்மொழிவும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச சட்டத்தையும் மீறும் வகையிலான செயற்பாடாகும்.

அது மாத்திரமின்றி 2021 ஆம் ஆண்டுக்கான நிவாரண கொடுப்பனவுக்காக 561 பில்லியன் மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2019 ஆம் ஆண்டில் எம்மால் ஒதுக்கப்பட்ட நிதியை விடக் குறைவாகும். எனினும் அடுத்த ஆண்டு 2 ஆயிரத்து 997 பில்லியன் ரூபா கடன் பெறவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி வேகம் நூற்றுக்கு 20 சதவீதமாகக் குறைவடைந்துள்ள இந்நிலையில் இவ்வாறு கடன் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜைக்கா என்பவற்றிடமிருந்து சர்வதேச கடன்பெற தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் ஜைக்கா நிறுவனம் கடன் தர மறுப்புத் தெரிவித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கத்தின் அபிவிருத்திகளை அடுத்த வருடத்தில் அனைவராலும் அவதானிக்க முடியும். – என்றார்

# கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.24

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான எல்லை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானம் எட்டப்பட்டது

கிளிநொச்சி மாவட்டம் முழுமையாக ஒரேயொரு கல்வி வலயத்தின் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்படுவதனால் பாரிய நிதி நெருக்கடி, நிர்வாக நெருக்கடிகளுடன், வளப் பங்கீடுகள் தொடர்பிலும் நெருக்கடி நிலைமையே உள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதனை நிவர்ததி செய்யும் வகையில் கிளிநொச்சி வலய நிர்வாகத்தை குறைந்தது இரண்டாகப் பிரிக்க வேண்டும் என கடந்த 15 ஆண்டுகளாகக் கோரிக்கை விடப்படுகின்றது.

வலயத்தை இரண்டாகப் பிரிப்பதானால், அது எதன் அடிப்படையில் அது அமைய வேண்டும், அதன் எல்லைகள் என்ன என்பவற்றோடு அலுவலக அமைவிடம் எனப் பல விடயங்கள் தொடர்பில் இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம.பெற்றது.

இக் கலந்துரையாடல் மாவட்டச் செயலாளர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. இதில் மாகாண, வலய, கோட்ட அதிகாரிகளுடன் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வியாளர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதுள்ள நான்கு கோட்டங்களான கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிளைப் பள்ளி ஆகியவற்றில் கரைச்சிக் கோட்டத்தை தனியாகவும், ஏனைய 3 கோட்டங்களையும் உள்ளடக்கி பரந்தனில் இரண்டாவது வலயத்தை அமைப்பதே பொருத்தமானதும் சாத்தியப்பாட்டானதும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# கோட்டா அரசின் கன்னி ‘பட்ஜட்’ மீதான குழு நிலை விவாதம் நேற்று ஆரம்பமானது

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. இந்த விவாதம் டிசம்பர் 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவால் கடந்த 17 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டுக்கான

வரவு – செலவுத் திட்ட யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 21 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது வரவு – செலவுத் திட்டம் 99 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. குறித்த வாக்கெடுப்பின்போது இதற்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

இந்தநிலையிலேயே 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாம் நேற்றிலிருந்தது டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மக்களை சரியாக வழி நடத்துங்கள்!

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை, யுத்தத்தில் சமராடி வீழ்ந்த வீரர்களை – தமிழ்ப் போராளிகளை – நினைவேந்தல் செய்ய இடமளிக்க மாட்டோம் என்று தென்னிலங்கைப் பேரினவாதம் பேயுருக் கொண்டு கர்ச்சிக்கின்றது.

தென்னிலங்கைப் பேரினவாத்தின் எழுச்சி வடிவமாக முன்னிறுத்தப்படும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரலாற்றில் பௌத்த, சிங்களப் பெருமன்னராகத் தாம் முடி சூடிக் கொள்வதற்காக இந்த இலங்கைத் தீவில் தமிழர்களுக்கும் அவர்களின் தேசியத்துக்கும் உள்ள வரலாற்றுப் பிறப்புரிமைகளை – பாரதீனப்படுத்த முடியாத, பறிக்கப்பட முடியாத உரித்துக்களை – மிதித்துத் துவம்சம் செய்து சீரழிக்கத் துடியாய்த் துடிக்கின்றார்.

அந்தக் கொடூர அட்டகாசத்தின் செயல் வடிவமாகத்தான் போரில் கொல்லப்பட்டவர்களை நினைவேந்தல் செய்வதற்கான தமிழ் மக்களின் கூட்டுரிமை வல்வந்தமாக மறுதலிக்கப்பட்டு, சிங்கள மேலாண்மை திணிக்கப்படுகின்றது.

ஆட்சிப் பீடங்களில் ஆள்கள் மாறும்போது நாட்டின் சட்டங்களும் தம்பாட்டில் உருமாறுகின்றன போலும். ராஜபக்ஷக்களின் கெடுபிடி இப்போது அரங்கேறும் விதம் அத்தகைய எண்ணத்தைத்தான், எமக்குத் தந்து நிற்கின்றது.

2015 முதல் 2019 வரை மாவீரர் வாரங்களின் போது, யுத்த காலத்தில் மரணித்துப்போன தங்களின் உறவுகளை எணணி, நினைவேந்தி, அஞ்சலிக்க நம் மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆனால், மீண்டும் ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பீடம் ஏறியதும் – கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியேற்றதும் – அரசு இயந்திரத்தின் செயற்போக்கும், சிந்தனையும், நடவடிக்கைகளும், அணுகுமுறைகளும் தலைகீழாக மாறி விட்டன.

சட்டம் மாறவில்லை. ஆட்சியாளர்கள்தான் மாறினர். அதையடுத்து கையாளும் முறைகளும் மாறி விட்டன.

2015 தொடக்கம் 2019 வரை கார்த்திகை கடைசி வாரத்தின் போது, அதுவரையில் யுத்தத்தில் மரணித்த தமது உறவுகளை ஒன்று திரண்டு, பொது வெளியில் அஞ்சலிக்க தமிழ் மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், இப்போதே அதே செயலைச் செய்யும் தமிழ் மக்கள், நாட்டின் மிக மோசமான – மிகக் கேவலமான – மிகக் கொடூரமான – பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற அநாகரிக கொடூர விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு, வருடக் கணக்கில் ஏனைய அரசியல் கைதிகள் போலத் தடுத்து வைக்கப்பட்டு, தடுப்புக் காவலில் உழலக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலைக் கவனமாகக் கையாள வேண்டிய கட்டாயம் தமிழ்த் தேசியத் தலைமைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

வெறுமனே உணர்ச்சிப் பெருக்கில் – அல்லது வாக்கு வங்கிகளைத் தக்க வைக்கும் இலக்கில் – அல்லது மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் – 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று நடந்து கொள்ளக் கூடாது.

தந்திரோபாயமாக – சாதக, பாதகங்களை சீர்தூக்கிப் பார்த்து – உரிமைகளுக்கும் அடிமைப்படுத்தலுக்கும் இடையிலான சமய சந்தர்ப்பங்களை ஆராய்ந்து – தீர்மானம் எடுத்து மக்களை வழிப்படுத்தும் பொறுப்பு தமிழ் தலைமைகளுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து நீதிவான் நீதிமன்றங்களையும் தன் விருப்பப்படி – தன்னிஷ்டப்படி – ஆட்டுவிக்க முடியாத சிங்கள ஆட்சிப் பீடம், நீதிவான் நீதிமன்றங்களின் கட்டளைகள் மூலம் இந்த நினைவேந்தலைத் தடுக்கும் தனது எத்தனத்தைக் கைவிட்டு, மாற்று வழியை நாடவுள்ளது. பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலிஸார் நேற்று வெளியிட்ட தகவல்கள் இதனை ருசுப்படுத்தப் போதுமானதவை.

இந்த விடயத்தைப் பாதுகாப்பு அமைச்சே இனி நேரடியாகக் கையாளும் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்த கூற்றுக்குள் பல விடயங்கள் அடங்கியிருப்பதை அரசியல் தலைமைகள் உரிய சட்ட ஆலோசனைகள் பெற்று தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆள்கள் கைது செய்யப்பட்டால் அவர்களைத் தடுத்து வைப்பதற்கான தடுப்புக் காவல் உத்தரவுப் பத்திரத்தை வழங்கும் அதிகாரம் அச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குரியது.

இன்றைய நிலையில் தமிழர்களின் தேசிய எழுச்சியின் உணர்வுருவாக இருக்கும் மாவீரர் வார நிகழ்வுகளை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதன் மூலம், தன்னுடைய தென்னிலங்கை ஆதரவுத் தளத்தை திருப்திப்படுத்தி, வலுப்படுத்திக் கொள்வதில் முனைப்பாக உள்ளது பேரினவாதத் தலைமை. அதை நிறைவு செய்வதற்கு இந்த வாய்ப்பை அது வசமாகப் பயன்படுத்தும் ஆபத்து நம்மைச் சூழ்ந்துள்ளது.

அப்படிச் செய்வதன் மூலம், சர்வதேசத்தில் தனக்கு எதிராக எழக் கூடிய அழுத்தங்கள் குறித்து கொழும்பு சிந்திக்குமா என்பதில் தொடங்கி, இத்தகைய அற்ப அச்சுறுத்தல்களுக்கு எல்லாம் இடமளித்து, அடங்கினால், தமிழினத்தின் முழு உரித்தையும் விட்டுக் கொடுப்பதாக அது மாறி விடாதா என்பது வரை அனைத்து விடயங்களையும் – சாதக பாதகங்களையும் நுணுகி, விசாலமாக ஆராய்ந்து, ஒரு முடிவை எடுத்து, தமிழ் மக்களை வழிப்படுத்தும் பெரும் பொறுப்பு தமிழ்த் தலைமைகள் மீது இப்போது வீழ்ந்துள்ளது. என்ன செய்யப் போகின்றார்கள் அவர்கள்?

# அனைத்து மக்களுக்கும் விகிதாசார அடிப்படையில் நிதி ஒதுக்கவேண்டும்!

## இரா.சாணக்கியன் கோரிக்கை



அனைத்து மதங்களுக்கும் விகிதாசார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக் குழுக் கூட்டம் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றுள்ளது.

இதன்போது, பௌத்த மதத்துக்கு 30 கோடி ரூபாயும், இந்து மதத்திற்கு 80 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட இரா.சாணக்கியன், ஏனைய மதங்களுக்கும் விகிதாசார அடிப்படையில் பணம் ஒக்கீடு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தும் வகையில் பிரதமர் தலைமையில் ஆணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த ஆணைக்குழுவின் ஊடாக இவ்வாறான நிதியொதுக்கீடுகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய கூட்டத்தின்போது அதன் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆவணங்களின் அடிப்படையிலேயே இரா. சாணக்கியன் மேற்கண்ட விடயங்களை முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வைத்தியசாலையால் தப்பிக்க முயன்ற நோயாளி கைது!

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையிலிருந்து தப்பிக்க முயன்ற கொரோனா நோயாளி ஒருவர் வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும்பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரி வித்தார்.

மேலும் இவ்வாறு தப்பிச்செல்ல முயன்றவர் 22 வயதுடைய தெமட்டகொட பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திவிநெகும நிதி மோசடி குற்றம் பஸிலின் பயணத் தடை நீக்கம்!

*கொழும்பு, நவ.24*

*முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை கொழும்பு மேல் நீதிமன்றம் நீக்கியுள்ளது.*

*இதனை அடுத்து விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்குமாறு அதிகாரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.*

*2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது, திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான நிதியை முறைக்கேடாக பயன்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவத்தில் அவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது.*

# நாடுமுழுவதும் பயணம் செய்து ஐ.தே.கவைப் புனரமைப்போம்!

## என்கிறார் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் மூலம் ரணில் விக்ரமசிங்கவே நாடாளுமன்றத்திற்கு செல்ல வேண்டும் என விரும்புகின்றனர் என அந்தக் கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் –

கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை அன்று சிறிகொத்தவில் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த விவகாரம் தொடர்பாகக் கட்சி விவாதித்ததாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வீழ்ச்சியடைந்துள்ள கட்சியை மீட்டெடுப்பதற்குரிய நேரம் வந்துவிட்டதால் நாங்கள் நாடு முழுவதும் பயணம் செய்து, கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்வோம் என்றும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார்.

இதேவேளை வரவு – செலவுத் திட்டத்தில் சில பாராட்டத்தக்க திட்டங்கள் இருந்தாலும், அந்தத் திட்டங்களை செயற்படுத்த அரசாங்கத்துக்குப் போதுமான நிதி இல்லை என்றும் இதன் காரணமாக விவசாயத் துறையில்



திட்டங்களைச் செயற்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு கொரோனா தொற்று காரணமாகப் பாதிக்கப்படக்கூடிய, மீன்வளத் துறை மற்றும் ஆடைத் துறையில் கவனம் செலுத்துமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஒரு நெருக்கடியான நிலையில் நாட்டை நிர்வகிக்க ரணில் விக்ரமசிங்க போன்ற ஒருவரின் தலைமை நாட்டுக்கு அவசியம் என்றும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'என் மனதில் ஆழப் பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை.'
- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

# கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியில் அனைத்து இனப் பிரதிநிதிகளும் வேண்டும்!

## ஹக்கீம் சபையில் கோரிக்கை



கிழக்கில் தொல்பொருள் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலணியில் அனைத்து இனங்களின் பிரதி நிதித்துவமும் உள்வாங்கப்படவேண்டும். ஓர் இனத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்பட்டுள்ள குழுவினூடாக நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. அவரின் இந்த பதவிக்காலம் தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவருக்கு இன்னும் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கருதுகிறேன். 20 ஆவது திருத்தத்தினூடாக அவரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தனக்குப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நிபுணர் குழுக்கள் ஆலோசனை வழங்குவதாக அவர் கூறியிருந்தார். மனித உரிமை ஆணைக்குழு காத்திரமாக செயற்பட போதுமான நிதி மற்றும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். பாடசாலைக்கு மாணவர்கள் சேர்ப்பது தொடர்பில் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.

கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பில் கொழும்பு, வாழைச்சேனை உட்பட பல பகுதிகளில் குறைபாடு காணப்படுகிறது. தேவையான பகுதிகளில் கூடுதலான ஆளணியை ஈடுபடுத்த வேண்டும். சில கிராம சேவகர்கள் தமது பணியை சரிவரச் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது.

மேலும் ஜனாதிபதி பல்வேறு ஜனாதிபதி செயலணிகளை நியமித்துள்ளார். கிழக்கில் தொல்பொருள் பாதுகாப்புக்கும் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. நாடுமுழுவதும் தொல்பொருள் முக்கியமான இடங்கள் இருந்தாலும் கிழக்கு தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனைக் கவனமாகவே கையாள வேண்டும். பொதுமக்கள் ஒத்துழைக்கத் தயாராக உள்ளனர். இந்த தொல்பொருள் விடயத்தில் உரிய பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும் பெண் ஒருவரை நியமிக்க வேண்டும். அதேபோன்று குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வழங்கும் வகையில் அரசு செயற்பட வேண்டும். நிதி அமைச்சின் செயலாளர் உட்பட பல பதவிகளை வகித்த தற்போதைய ஜனாதிபதி செயலாளர் பீ.பி.ஜெயசுந்தரவுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். – என்றார்.

# மாட்டுடன் மோதி சிப்பாய் மரணம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் மணவாளன்பட்ட முறிப்புப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவச் சிப்பாய் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள 574 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த குறித்த சிப்பாய் சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் ஒட்டு சுட்டானில் இருந்து



மாங்குளம் நோக்கி வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மணவாளன் பட்ட முறிப்புப் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளா கியுள்ளார்.

அவர் உடனடியாக குறித்த பகுதி வழியாக சென்ற அம்புலன்ஸ் ஊடாக மாங்குளம் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது உயிரிழந்துள்ளார்

சம்பவத்தில் உயிரிழந்தவர் கலாகம வீதி, ரயில் நிலைய சந்தி, மதவாச்சியைச் சேர்ந்த 38 வயதுடைய இரண்டு பிள் ளைகளின் தந்தையான கொள்ளுபத்திரகே சமிந்த கௌஸால் கல்தேரா என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்றுமுன்தினம் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 303 பேர் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 303 இலங்கையர்கள் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி குவைத்திலிருந்து 283 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் கட்டார், தோஹாவிலிருந்து 18 இலங்கையர்களும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அத்துடன், ஜப்பான் நரிட்டோவிலிருந்து இருவர் அதிகாலை 4.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஹற்றனில் இரு பாடசாலைகளுக்குப் பூட்டு மலையகத்தில் மாணவர் வருகை குறைவு!

நாடளாவிய ரீதியில் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நேற்று (திங்கட்கிழமை) காலை ஆரம்பமான நிலையில், மலையகத்திலுள்ள பாடசாலை களிலும் கல்விச் செயற்பாடுகள் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஆரம்பித்துள்ளன.

மாணவர்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப் பின்பற்றி அச்சமின்றி வழமைபோல் பாடசாலைகளுக்கு வந்திருந் தாலும், மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் பாடசாலை வளாகத்துக்குள் வந்ததும் அவர்களின் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டு, கைகளை கழுவிய பின்னர் வகுப்பறைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், வகுப்பறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றும் விதத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் ஒரு சில பாடசாலைகளில் இதனைக் காண முடியவில்லை. வளப்பற்றாக்குறையே இதற்குக் காரணம்.

நாட்டில் 10 ஆயிரத்து 165 அரச பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 13 வரை உள்ள 5 ஆயிரத்து 233 பாடசாலைகள் உள்ளன.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் நேற்று திறக்கப்பட்டன. ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

அதேவேளை, ஹற்றன் கல்வி வலயத்திலுள்ள ஹற்றன் வெளிஓயா மலைமகள் தமிழ் வித்தியாலயம், ஆக்ரோயா தமிழ் வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் இன்று திறக்கப்படவில்லை.

இப்பகுதிகளில் நேற்று கொரோனா தொற்றாளர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே பாடசாலைகள் திறக்கப்படவில்லை. அத்துடன், இந்தப் பகுதிகளில் இருந்து வேறு பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களை வீட்டில் இருந்தே கல்வி நடவடிக்கைகளை தொடருமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் புத்தாக்க பற்றரி தொழில்நுட்ப ஆய்வுகூடம்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உலக வங்கி அனுசரணையுடன் புத்தாக்க மின்கல (பற்றரி) தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டு திறந்து வைக்கப்படவுள்ளன.

நவீனமயப்படுத்தப்பட்ட இவ் ஆய்வு கூடங்களின் திறப்புவிழா நிகழ்வு எதிர் வரும் 25 ஆம் திகதி, வியாழக்கிழமை காலை 10. 30 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தரும், முன்னாள் விஞ்ஞானபீடதி பதியுமான பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா இந்த ஆய்வுகூடங்களைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் துறைகள் இணைந்து முன்னெடுக்கும் பற்றரி ஆராய்ச்சியின் திட்ட வரைவின் தரத்தினைக் கருத்தில் கொண்டு உலகவங்கி தனது அபிவிருத்தியை நோக்கிய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நான்கு கோடி ரூபா நிதிப்பங்களிப்பினை வழங்கியுள்ளது.

இந்த ஆராய்ச்சி முன்னெடுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரையான மூன்று வருட காலத்துக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த திட்டமிடப்பட்ட ஆராய்ச்சியினை வசதிப்படுத்துவதற்காக இரண்டு ஆய்வு கூடங்கள் பௌதீகவியல்துறை மற்றும் இரசாயனவியற்துறையில் மறுசீரமைக்கப்பட்டு உயர் தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்கள் பொருத்தப்பட்ட சர்வதேச தரத்திலான பற்றரி ஆராய்ச்சிக்கான ஆய்வுகூடங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் அதி செயற்திறன் உடைய கணணிகள், புகைப்படக் கருவிகள், தொடர்பு சாதனங்கள் போன்ற இலத்திரனியல் கருவிகளின் நீண்டகால பாவனைக்கு உகந்த அதே நேரம் உற்பத்திச் செலவும் குறைந்த பற்றரிகளை உருவாக்குவதற்கான ஆய்வு நடவடிக்கைகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது கணணிகள், புகைப்படக் கருவிகள், தொடர்பு சாதனங்கள் போன்ற இலத்திரனியல் கருவிகளின் நீண்டகால பாவனைக்கு கிடைத்தற்கரிய லித்தியம் மின்பகுபொருள் கொண்ட பற்றரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ் பல்கலைக்கழகத்தில் திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகின்ற ஆராய்ச்சியில் எளிதில் கிடைக்கக்கூடிய சோடியம் மற்றும் மக்னீசியத்தினை பயன்படுத்தி புத்தாக்கமாக பல சவால்களை எதிர்கொண்டு மேம்பாடான உற்பத்திச் செலவு குறைந்த எளிதில் கிடைக்கக்கூடிய பற்றரிகளின் தொழில்நுட்பமானது வடிவமைக்கப்படவுள்ளது.

மேற்படி புத்தாக்கத் தொழில்நுட்பத் திட்டமானது உலகளாவிய பரிமாணம் கொண்டது. அரிசோனா அரச பல்கலைக்கழகம் – அமெரிக்கா, சால்மேர்ஸ் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் – சுவீடன், தேசிய விஞ்ஞான நிறுவனம் – கண்டி, விஞ்ஞானபீடம் யாழ் பல்கலைக்கழகம் என்பவற்றின் கூட்டு ஆராய்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களான பௌதீகவியற்துறையைச் சார்ந்த கலாநிதி கந்தசாமி விக்னரூபன், சிவசுப்பிரமணியம் செந்தூரன் மற்றும் இரசாயனவியற்துறையைச் சார்ந்த பேராசிரியர் குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி, கலாநிதி கணேசலிங்கம் சசிகேஷ் ஆகியோர் இப்புத்தாக்க பற்றரி தொழில்நுட்பத்திற்குரிய ஆராய்ச்சிக் குழுவில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இவ்வாராய்ச்சியாளர்களின் வழிகாட்டுதலில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆறு விஞ்ஞானமாணி பட்டதாரிகள் புத்தாக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முதுவிஞ்ஞானமாணி பட்டப்படிப்புப் பயிற்சியினை பெற்று வளவாளர்களாக மேன்மையடையவுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது வாழ்வில் காணாமல் போகும்

## அம்மி, ஆட்டுக்கல், உரல், திரிகை



ந.லோகதயாளன்

தமிழர் வாழ்வில் ஒன்றித்திருந்த உணவுப் பழக்க வழக்கங்கள் கையை விட்டுப்போனமையே இன்று மருந்தும் கையுமாக தமிழர்கள் அலையும் நிலைமை வந்தமைக்கு ஒரு காரணம் என்று தெரிவிக்கப்படுவதனை முழுமையாக மறுக்க முடியவில்லை.

இன்றைக்கு இரு தலைமுறைக்கு முன்பு பல முறைமைகள் நம்மிடம் இருந்தன. நெல்லைக் கையால் குற்றி அதில் சோறாக்கிச் சாப்பிட்டவர்கள் – கறி வைப்பதற்கு தேங்காய் சொட்டும் மிளகாயும் அம்மியில் அரைத்தது, மாலை உணவிற்கு மரவள்ளி மா அல்லது ஒடியல் மா இடித்து பிட்டு அவித்து உண்டவர்கள் – நல்ல தேகாரோக்கியத்துடன் குறைந்தது 85 வயதுவரை வாழ்ந்தனர். சிலர் 100 வயதினையும் அண்மித்தனர். ஒரு சிலர் 'செஞ்சுரி' யும் போட்டனர்.

ஆனால், அன்றைய உணவு வகைகளும் அவற்றைக் கையாள நாம் பயன்படுத்திய இயற்கைக் கருவிகளும் இனிக் காட்சிப் பொருள்களாக மாறிவிடுமோ என்கின்ற அச்சம் எழுகின்றது.

இவற்றின் மறைவால், இதுவரை இவற்றின் மூலம் தொழில் வாய்ப்பை இழந்த நூற்றுக் கணக்கான குடும்பங்களின் அவலமும் மறக்கப்படுகின்றது.

அம்மி, ஆட்டுக்கல், உரல், திரிகை போன்றவை தயாரித்த பின்பு அவற்றின் பயன்பாட்டிற்காக அவ்வப்போது அவற்றைப் பொழிய வேண்டும். இப்படிப் பொழிவதற்கு முன்னைய காலங்களில் இவற்றினை விற்பனை செய்யும் இடங்களில் விசேட வனைஞர்கள் இருந்தனர். அது மட்டுமன்றி அங்கு பயிற்சி பெற்ற பல நூறுபேர் கிராமங்களிலும் பொழியும் தொழிலை மேற்கொண்டனர். இன்று ஒரு சிலர் மட்டுமே இத் தொழிலை மேற்கொள்கின்றனர்.

### தொழிலாளியின் கருத்து

இத்துறையில் 35 வருட அனுபவம் கொண்ட நாவாந்துறையை சேர்ந்த வே.ரவி என்னும் 4 பிள்ளைகளின் தந்தை இத்துறை தொடர்பில் தனது அனுபவத்தை தொழில் கிடைத்த இடத்தில் பகிர்ந்து கொள்கின்றார்.

எனக்கு தற்போது 49 வயது. 35 வருடமாக இந்தத் தொழில்தான் சோறு போட்டதோடு முழுமையான குடும்ப வருமானமும் போதிய அனுபவம் உடைய – கைவசம் உள்ள – ஒரே தொழில் இதுதான். நான் நாவாந்துறை வில்லூண்டியடில் வசிக்கின்றேன். இந்த தொழில் நாம் இருக்கும் இடத்தைத் தேடி வருவது கடினம். அதற்கே ஒரு பெரிய செலவு ஏற்படும் என்பதனால் நாம்தான் தொழிலைத் தேடி வீடு , வீடாகச் சென்று பணியாற்றுவோம். முன்பு பல கடைகள் காணப்பட்ட சமயம் அங்கே புதிதாக இந்தக் கருவிகள் வாங்கப்பட்டன. அதனால் இக்கருவிகளை உற்பத்தி செய்யும் ஒரே இடத்தில் போதிய தொழில் வாய்யப்பு இருந்தது. அதேநேரம் புதிய உற்பத்தியுடன் பொழிவிற்காகவும் வாடிக்கையாளர்கள் எம்மை நாடினர்.

ஆனால் இப்போது கிரைண்டர், மிக்சி, அரைக்கும் ஆலைகள் போன்றவை எமது தொழிலை ஆக்கிரமித்



தன.

இவ்வாறு ஆயிரக் கணக்கானோர் – அதாவது கருங்கல் எடுத்தல், அதனை வகைப்படுத்தல், ஏற்றி இறக்கல், பின்பு பொழிவு மூலம் உற்பத்தி, அதனை அவ்வப்போது பொழிந்து நேர்சீராக்கல் எனப் பல நூறு இடங்களில் பல ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றினர். தொழில் மிக்சி, கிறைன்டர், அரைக்கும் ஆலை என்பன வந்தமையினால் எமது தொழில் மெல்ல மெல்ல நலிவடைந்து இன்று அழிவடையும் நிலமைக்கே சென்றுவிட்டது. இதே போன்று தொழில் வாய்ப்பு குறைவடைவதனால் இத னைப் பழகவும் அடுத்த தலைமுறையும் பின் நிற்கின் றது.

ஏற்கனவே கொள்வனவு செய்து வீடுகளில் உள்ள அம்மி, ஆட்டுக்கல், திருகை என்பன இன்று எத்தனையோ வீடுகளில் பயன்பாடு இன்றி எதற்கு பயன்படுத்துவது என தெரியாமல் காத்திருக்கின்றன. இவைதான் இயந்திர வாழ்க்கை எனப் புரிந்து கொண்டோம். இதேநேரம் தமிழர்கள் என்னதான் இயந்திர வாழ்க்கைக்கு மாறினாலும், பழமையைக் கைவிட்டு அனைத்தும் இயந்திர மயமாகியமையே முன்பு அறிந்திராத புது புது நோய்களிற்கும் காரணம். இத்னை இந்தப் படியாத ஏழை கூறினால் அது சபை ஏறாது. – என்றார்.

> அம்மி, ஆட்டுக்கல், திருகை என்பன இன்று எத்தனையோ வீடுகளில் பயன்பாடு இன்றி எதற்கு பயன்படுத்துவது என தெரியாமல் காத்திருக்கின்றன.

கலாசாரம் அல்லது மரபின் காரணமாக எமக்கு தற்போதும் தொழில் கிட்டுகின்றது.

தமிழ் மக்களை பொறுத்த மட்டில் அவர்களிடம் பல மரபுகள் உண்டு.

கலியாண வீட்டில் அம்மி மிதிப்பது, ஒரு பெண் பிள்ளை பருவமடைந்தால் பராமரிப்பது, மகப்பேற்றின்போது தாய்மாரைப் பராமரிப்பது என்பன இன்றும் உள்ளன. அதாவது பராமரிப்பு என்றால் அது தனியான உணவுப் பழக்க வழக்கம். அதற்கு அரைச்ச கறியினையே தயார் செய்வார்கள். அப்போது கண்டிப்பாக அம்மியைத் தேடி எடுப்பார்கள். அப்படி எடுக்கும்போது அதனை பொழிய வேண்டிய நிலமை ஏற்படும். இதனால் எமக்கான தொழில் வாய்ப்பு கிட்டும்.

இதேநேரம் தொழில் வாய்ப்பைத் தேடி ஊர் ஊராக தற்போது நாமே செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும்போது கிடைக்கும் வருமானத்தில்தான் குடும்ப வாழ்வாதாரம் உருளும். ஆனால் மழை காலம், தற்போது போன்ற கொரோனா காலம் என்றால் அதற்கும் சிரமம்தான்.

இன்றும் அம்மியின் பாவனை அதிகமாக காணப்படும் கிராமங்களாக கரையூர், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, சக் கோட்டை, திக்கம், நிலாவறை, தம்பசிட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன. அப்பகுதிகளிற்கு செல்லும் போது அதிக வருமானம் கிடைக்கும்.– என்றும் அவர் கூறினார்.

### பெண்மணியின் கருத்து

பாவனையாளரான பெண்மணி ஒருவர் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் –

இன்று எனக்கு 69 வயது. என்னால் இனி அம்மியில் அரைக்கவோ, உரலில் குற்றவோ முடியாது. சின்ன வயதில் நாம் வீட்டில் சும்மா இருந்தோம். இவற்றினை செய்தோம். ஆனால் தற்போது பெண் பிள்ளைகளே அதிகம் கற்கின்றனர், பலரும் வேலைக் கும் செல்வதனால் இவற்றிற்கான நேரம் கிடைப் பதில்லை. அதனாலேயே மிக்சி, கிரைண்டரை நாடுகின்றோம். அரிசியை றைஸ் மில்லிற்கும் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. அதேநரம் நான் 23 வயதில் 450 ரூபாவிற்கு ஆட்டுக்கல்லும், அம் மியும் வேண்டினேன் . ஆனால் இன்று அவற்றை ஒரு தடவை பொழிவதற்கே 600 ரூபா வரை வழங்க வேண்டியுள்ளது. எல்லாம் கையும் கணக்கும் சரியாகவே உள்ளன. – என்றார்.

# தொலைநோக்கு முறைமை ஊடான கல்விக்கு உறுதியான கொள்கை!

## சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

நெருக்கடியான சூழ்நிலையில் தொலைநோக்கு முறைமை ஊடாக பாடசாலை கற்றல் நடவடிக்கையை முன்னெடுக்க உறுதியான கொள்கை வகுக்கப்படும் என தொலைநோக்கு கல்வி முறைமை இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் –19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எவ்வித பிரச்சினைகளுமின்றி இடம்பெற்று முடிந்துள்ளன.

பாடசாலை விடுமுறைக் காலத்தில் தொலைநோக்கு கல்வி முறைமை



ஊடாகக் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.


கொவிட் –19 வைரஸ் தாக்கம் எக்காலத்திலும் எதிர்பார்க்கும் விதமாக உள்ளது. விடுமுறை காலத்தில் தொலைநோக்கு முறைமை ஊடாகக் கற்றல் நடவடிக்கையை முன்னெடுக்க உறுதியான கொள்கை வகுக்கப்படும்.

சவால்களை வெற்றி கொண்டு பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் அரசியல் நோக்கம் கருதி குற்றஞ்சாட்டுவதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தொலைநோக்கு முறைமையில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க கல்வி அமைச்சுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். – என்றார்.

மருத்துவர் சி. யமுனாநந்தா

# அகிலமும் மனித மூளையும் — கட்டமைவு ஒப்பியல்




நட்சத்திரங்களின் வலையமைப்பும் மூளை நரம்புக் கலங்களின் வலையமைப்பும் ஒரே படத்தில்

## திருமூலர் அன்றே கூறியவற்றை விஞ்ஞானம் இன்று உணர்கிறது

அன்றைய விஞ்ஞான ஆய்வுகள் மனித மூளையின் கட்டமைப்பும் அகிலத்தின் கட்டமைப்பும் உருவவியல் ரீதியில் ஒரே தன்மையுடையனவாக அமைகின்றமையை அவதானித்துக் கணித்து வியப்பில் உள்ளனர் விஞ்ஞானிகள்.

இவற்றை நுணுக்குக் காட்டி மூலமான மூளையின் ஆய்வின் மூலமும், தொலைக்காட்சி மூலமான வானியில் அவதானிப்புக்கள் மூலமும் ஆராய்ந்து உறுதிப்படுத்தி உள்ளனர்.

இவ்வாராய்ச்சிகளை இத்தாலி நாட்டைச் சேர்ந்த வானியல் பௌதீக அறிஞர் Franco Vazza உம் நரம்பியல் அறிஞர் Alberto Feletti உம் கணிப்பிட்டுக் கூறி உள்ளனர். நாம் வாழும் அகிலம் இத்தகைய அகில மாதிரியில் ஒன்றிலேயே ஆகும். இவ்வாய்வில் வலைப் பின்னல் ஆய்வாளர்களும் (Network Scientists) பங்களித்தனர்.


இவ்வாய்வுகளின்படி மனித மூளையில் நரம்புக் கலங்களின் வலையமைப்புக் காணப்படுகின்றது. அகிலத்தில் (Universe) உடுத்தொகுதிகளில் வலையமைப்பு (Cosmic Web of galaxies) காணப்படுகின்றது. மனித மூளையில் நரம்புக் கலங்களின் வலையமைப்பும் அகிலத்தின் நட்சத்திரங்களின் வலையமைப்பும் ஒரே மாதிரியாகவே தென்படுகின்றது.


மனித மூளையில் 100 பில்லியன் நரம்புக் கலங்கள் உள்ளன. இவற்றுக்கு 100 ரில்லியன் நரம்பு இணைப்புக்கள் உள்ளன. நரம்பு இணைப்புக்கள் மூலமே எண்ணங்கள், உணர்வுகள் ஏற்படுகின்றன. மூளையின் திணிவில் 25 வீதத்துக்கு நரம்புக் கலங்கள் காரணமாகின்றன. மூளையின் திணிவில் 75 வீதத்துக்கு நீர் காரணம் ஆகும்.

அகிலத்தின் கட்டமைப்பில் 100 பில்லியன் உடுத்தொகுதிகள் உள்ளன. அகிலத்தின் விரிவும், ஈர்ப்பு அலைகளின் தாக்கமும் அண்ட வலைப்பின்னலை (Cosmic Web) உருவாக்கி உள்ளது. இவை சுருள் வடிவ இழைகளாக காணப்படுகின்றன. அண்டப் பதார்த்தத்தில் 25 வீதம் புலப்படக்கூடியவை. 75 வீதம் புலப்படாத கரும்பதார்த்தமாகவும் அமைகின்றது.

இவ் ஒப்பமைவு மூளையின் கட்டமைவுடன் பொருந்துவது தற்போதைய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களது ஆய்வின் முடிவுகளின் ஆச்சரியமாகும்.

அகிலத்தின் கட்டமைப்பும் மூளையின் கட்டமைப்பும் உருவவியலில் ஒத்து அமைகின்றன. அளவிடையில் வேறுபாட்டையும் பௌதிகத் தன்மையில் வேறுபாட்டையும் கொண்டு உள்ளன. அளவிடையில் மூளைக் கலங்களிற்கு இடையே தொடர்புகள் ஒரு மைக்கிறோ மீற்றர் தொடங்கி 0.1 மில்லிமீற்றர் வரை காணப்படுகின்றது. அகிலத்தில் அண்டவலைப்பின்னல் 5 மில்லியன் ஒளியாண்டில் இருந்து 500 மில்லியன் ஒளியாண்டு வரையான இடைவெளியில் காணப்படுகின்றது. செயற்பாட்டு ரீதியில் நரம்புக்கலன்களின் ஞாபகச் செயற்பாடுகள் ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாட்டுக்கு வகைப்படுத்தக் கூடியதாக உள்ளது. அகிலத்தின் செயற்பாடும் சார்ப்புக் கோட்பாட்டில் வகைப்படுத்தக் கூடியதாக உள்ளது.





மூளை நரம்புக் கலங்களின் வலையமைப்பு

அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் உள்ள தொடர்பு சைவசித்தாந்தத்தில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. திருமந்திரப்பாடல்கள் பலவற்றில் இதன் சாரம் உள்ளது.

***பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலனைந்தும்***
***பிண்டத்தின் ஊடே பிறந்து மரித்தது***
***அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை***
***அண்டத்து நாதத் தமர்ந்திருந்தானே.***
(திருமந்திரம் 466)

***பிண்டத்தில் உள்ளுறு புலன்.............***
***அண்டத்தின் உள்ளுறு சீவன்***
***அண்டத்து நாதம்....***

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

இதுவே சைவசித்தாந்தத்தில் பிரணவப் பொருளாக மெஞ்ஞானிகளால் உணர்த்தப்படுகின்றது. ஓம் என்கிற ஓங்கார மெய்ப்பொருள்.

நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவம் படைத்தலின் அதிர்வையும் அனவரதத் தாண்டவம் அழித்தலிலும் அதிர்வையும் குறிக்கின்றன.

***அண்டத்தின் உள்ளே அளப்பரிதானவன்***
***பிண்டத்தின் உள்ளே பெருவெளி கண்டவன்***
***குண்டத்தின் உள்ளே குணம் பல காணினுங்***
***கண்டத்தில் நின்ற கலப்பு அறியார்களே.***
(திருமந்திரம் 1362)

அண்டத்தில் ஈர்ப்பு அலைகள் வெவ்வேறு அதிர்வெண்ணில் பயணிக்கின்றன. இவை கருந்துளைகளின் பிரவாகத்தில் தங்கி உள்ளன. இரண்டு கருந்துளைகள் ஒன்றிக்கும்போது ஈர்ப்பு அலைகளின் வீச்சு அதிகரிக்கும். இரு கருந்துளைகளுக்கு இடையிலான தூரம் அதிகரிக்கும்போது அக்கருந்துளைகளினால் உருவாகும் ஈர்ப்பு அலைகள் நீளம் அதிகரிக்கும்.

அண்டத்தில் அகிலங்கள் உருவாவதிலும், அகிலங்கள் விரிவடைவதிலும், அகிலங்கள் அழிவதிலும் ஈர்ப்பு அலைகளின் அதிர்வு செல்வாக்குச் செலுத்துகின்றது.


அகிலத்தினதும் மனித மூளையினதும் கட்டமைப்பினை ஒற்றுமையை திருமந்திரத்தில் அண்ட ஆதித்தன், பிண்ட ஆதித்தன் எனப் பொருள்பட அமைந்து உள்ளது.

***நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்***
***கன்றாய நந்தி கருத்துள் இருந்தனன்***
***கொன்று மலங்கள் குழல்வழி ஓட***
***வென்று விளங்கும் விரிசுடர் காணுமே.***
(திருமந்திரம் 1985)

இங்கு விரிசுடர் என்பது உடலில் விளங்கும் சூரியன் பிண்ட ஆதித்தன் ஆகும்.

***உணர்வு அது வாயமெ உத்தம மாயும்***
***உணர்வது நுண்ணறிவு எம் பெருமானைப்***
***புணர்வது வாயும் புல்லிய தாயும்***
***உணர்வு உடல் அண்டமும் ஆகி நின்றானே.***
(திருமந்திரம் 3022)

உடலாக, உணர்வாக, அண்டவெளியாக பரம்பொருள் அமைந்துள்ளதை திருமூலர் கூறுகின்றார். இதனையே தற்போதைய விஞ்ஞான நோக்குநர்களிலும் காண முடிகின்றது.






நட்சத்திரங்களின் வலையமைப்பு

# மாவீரர் நினைவேந்தல் விவகாரம்; பாதுகாப்பு அமைச்சே கையாளும்!

## பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்த விண்ணப்பத்தை மீளப்பெற்றனர் பொலிஸார்

**(எஸ்.நிதர்ஷன், எஸ்.லோகதயாளன்)**

பருத்தித்துறை,நவம்பர் 23

மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்துவதை அனுமதிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் என்பதால் அதனைப் பாதுகாப்பு அமைச்சு நேரடியாகக் கையாளவுள்ளது. அதனால், இந்த விவகாரத்தை ஒட்டிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை மீளப்பெறுமாறு காங்கேசன்துறைக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் தனது பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங் கள் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளால் இன்று மீளப்பெறப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று இருந்த வேளை வழக்குகளை மீளப்பெறுமாறு மேலிடத்திலிருந்து இந்த அறிவுறுத்தல் அவருக்குக் கிடைத்துள்ளது. அதனால் அறிவுறுத்தலை வழங்கிவிட்டு அவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலிருந்து சென்றுள்ளார்.

இதேவேளை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரி அச்சுவேலிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஏற்றுத் தடை உத்தரவு வழங்க மறுத்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், பொலிஸாரல் முன்வைக்கப்பட்ட குற்றவியல் நடைமுறைகளின் கீழ் குற்றமிழைக்கப்பட்டால் கைது செய்யலாம் எனத் தெரிவித்துள்ளது.

# மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு மன்னாரில் தடை உத்தரவு நீடிப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

மன்னார் மாவட்டத்தில் மாவீரர் நாளை நினைவுகூர மன்னார் நீதிவான் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் நினைவேந்தல் தடை உத்தரவுக்கு எதிராக தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று சட்டத்தரணிகள் ஊடாக நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தார்.

இதன்போதே விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் எம்.கணேசராஜா குறித்த தடை உத்தரவை நீடித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ள மன்னார் நீதிவான் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து தடை உத்தரவு பிறப்பித் துள்ளது. தமிழ்த் தேசிய வாழ் வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் உள்ளிட்ட பலருக்கு குறித்த தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவுக்கு எதிராக தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இதன்போது குறித்த வழக்கு விசாரணை சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் மன்னார் நீதி மன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் இன்று காலை குறித்த வழக்கு விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த உத்தரவை வழங்க நீதிவான் நீதிமன்றத்துக்குச் சட்டத்திலே நியாயாதிக்கம் கொடுக்கப்படவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன் றில் சமர்ப்பணம் செய்தார்.

மேலும் நீதிமன்றத்துக்கு நியாயாதிக் கம் இல்லாது இருந்தபோதும் கூடப் பொறுப்பானவர்கள் என்ற அடிப்படையில் நாங்கள் எந்தச் சட்டத்தையும் மீற மாட் டோம். சுகாதார நடைமுறைகளைக்கையாளுவோம். பொதுநிகழ்வை நடத்தினால் சுகாதார அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுச் செய்வோம் என்கின்ற உத்தர வாதங்களையும் நீதிமன்றத்துக்கு வழங்கி தடை உத்தரவை நீக்குமாறு சட்டத்தரணி கோரி இருந்தனர். எனினும், மன்னார் நீதிவான் குறித்த தடை உத்தரவை நீக்க மறுத்துள்ளார்.



தமிழீழ விடுதலைப்புலிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தடை செய்யப்பட்ட இயக்கமாக இருக்கின்ற காரணத்தால் குறித்த நிகழ்வுகளை நடத்த முடியாது எனவும், கொரோனா வைரஸ் தொற்று ஆபத்தான நிலையில் இருப்பதால் மக்கள் ஒன்றுகூடினால் குறித்த தொற்று பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமையாலும் ஏற்கனவே வழங்கப்பட்ட உத்தரவுகளை நீடிப்பதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

இதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவுகூர நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.க. செயலராக நவீன் திஸநாயக்க?

## விலகினார் அகிலவிராஜ்



ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை அகிலவிராஜ் காரியவசம் இராஜினாமா செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று நடைபெற்ற கூட்டத்தின்போதே இது தொடர்பான அறிவித்தலை அகில விடுத்துள்ளார்.

கட்சி மறுசீரமைப்புக்கு வழிவிடும் நோக்கிலேயே அவர் இவ்வாறு செய்தார் என கூறப்பட்டாலும் அதிருப்தி காரணமாகவே அவர்பதவி துறந்தார் எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஐ.தே.கவின் புதிய பொதுச் செயலாளராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படக்கூடும் என அறியமுடிகின்றது.

# தமிழ்க் கட்சிகளின் முடிவு செவ்வாயன்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,நவம்பர் 23

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் இறுதி முடிவு நாளை அறிவிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவம்பர் 27 நினைவேந்தல் நிகழ்வுகளை பொதுமக்கள் வீட்டிலிருந்து அமைதியாக நினைவுகூருமாறு ஏற்கனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ள போதிலும் தற்போது நாளுக்கு நாள் நிலைமைகள் மாற்றமடைந்து வருவதன் காரணமாக இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அதாவது இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நினைவேந்தல் நிகழ்வைத் தடை செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவை பொலிஸார் மீளப்பெற்றுள்ளார்கள். நாளுக்கு நாள் நிலைமை மாறிக்கொண்டு போகின்றது.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கட் சிகள் அனைத்தும் நாளை மீண்டும் ஒன்றுகூடி நினைவேந்தல் நிகழ்வை எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்த பின்னர் குறித்த விடயம் தொடர்பில் ஊட கங்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் - என்றார்.

# கிளிநொச்சியில் நினைவேந்தல் தடை: நகர்த்தல் மனு செவ்வாய் விசாரணை

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட மாவீரர் நாள் நினைவேந்தல் தடை உத்தரவுக்கு எதிரான நகர்த்தல் பத்திரம் மீது நாளை விசாரணை நடைபெறவுள்ளது.

இன்று குறித்த பத்திரம் சட்டத்தரணிகள் ஊடாக முன்வைக்கப்பட்டது. அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம், அது மீதான விசாரணையை நாளைய தினத்துக்கு அறிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தால் 17 பேருக்கு தடை உத்தரவு பிறப்பிக் கப் பட்டது. பல்வேறு விடயங்களை உள்ளடக்கிப் பொலிஸாரால் வழக்குத் தொடரப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் அடங்கலாக 17 பேருக்கு இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



இந்தநிலையில் குறித்த தடை உத்தரவுக்கு எதிரான நகர்த்தல் பத்திரம் இன்று முன்வைக்கப்பட்டது. மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் இன்று நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாத நிலையில் பதில் நீதிவான் குறித்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார். கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற சட்டத் தரணிகள் அனைவரும் குறித்த மனுவுக்கு ஆதரவாக சமுகமளித்திருந்தனர். இந்தநிலையில் குறித்த மனு மீதான விசாரணைத் திகதியாக நாளைய தினத்தை பதில் நீதிவான் அறிவித்தார்.

# தமிழ் மக்கள் பிரச்சினைபற்றி ஒன்றாகப் பேச சம்பந்தனை அழைக்கின்றார் வியாழேந்திரன்!

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒன்றாக இணைந்து பேசுவதற்கு, சம்பந்தன் உள்ளிட்ட அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இரு கரம் கூப்பி அழைக்கிறேன் வாருங்கள் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு – ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் எஸ்.வியாழேந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தற்போது புதிய வடிவம் வந்துள்ளது. நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், வியாழேந்திரனைப் பாருங்கள் என்றும் வடக்கிலே அங்கஜனைப் பாருங்கள் என்றும் எங்களைப்பற்றிதான் குறை கூறிக்கொண்டிருக்கின்றனர்.

எனக்கொரு சந்தேகம் அபிவிருத்தியையும் உங்களால் பெற்றுக்கொடுக்க முடியாது. நீங்கள் என்ன சொல்லி தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெற்றீர்கள்?

தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவோம், உரிமையைப் பெற்றுத்தருவோம்என்றீர்கள். அதைப்பெற்றுக்கொடுங்கள். நாம் அபிவிருத்தியை செய்கிறோம்.

ஆனால் நீங்கள், உரிமையையும் பெற்றுக் கொடுப்பதில்லை, அபிவிருத்தியையும் பெற்றுக்கொடுப்பதில்லை. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஒரே கதையை தமிழிலும், ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மாறி மாறி பேசிக்கொண்டு 4 அனுமதிப் பத்திரத்தை, மாத சம்பளத்தை பொலிஸ் பாதுகாப்பையும், அரசாங்கம் தரும் சிற்றூண்டி உணவையும் நன்றாகச் சாப்பிட்டு, அரசாங்க விடுதியில் நன்றாக படுத்து நித்திரை கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதற்கு இங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையில்லை.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள் எம் மக்களுக்குத் தேவை. உங்களால் தமிழ் மக்களுக்குரிய அடிப்படைப் பிரச்சினையை கூட பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் எதற்கு அரசியலில் இருக்கின்றீர்கள்?

நாங்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும் எமது இனத்திற்கு எதிரான வேலைகளை ஒரு போதும் செய்ய மாட்டோம்.

மக்களின் எதிர்பார்ப்பை நாடி பிடித்து நிறைவேற்றுபவன்தான் உண்மையான மக்கள் தலைவனாக இருக்க வேண்டும். பத்திரிகைக்கும் நாடாளுமன்றிலும் சத்தமிடுவதாலோ பத்திரிகைகளில் அறிக்கை விடுவதாலோ தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை.

எதிர்க்கட்சியில் இருக்கின்ற இரா. சம்பந்தன் உட்பட அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் இரு கரம் கூப்பி அழைக்கிறேன். வாருங்கள், தமிழ் மக்களின் பிரச்சினை சார்பாக எதிர்க்கட்சி ஆளும் கட்சி என்றில்லாமல் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒன்றாகப் பேசுவோம். நாங்கள் உங்களோடு வருகிறோம்.



உங்களுக்கு அது முக்கியமில்லை, பிரச்சினையிருந்தால்தான் உங்களுக்கு அரசியல். எங்களுக்கு எவ்வாறாவது பிரச்சினையைத் தீர்த்துக்கொடுக்க வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சுகாதாரப் பாதுகாப்பு முறைகளுடன் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன

சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு அமைவாக நேற்று (திங்கட்கிழமை) முதல் ரயில் சேவைகள் இடம்பெறவிருக்கின்றன என இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக நேற்று முதல் காலை மற்றும் மாலை வேளைகளில் விசேட அலுவலக ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என ரயில் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் ஏ.டீ.பி. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ரயில்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பொலிஸ் வலய பிரதேசங்களுக்குள் நிறுத்தாது செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, பிரதான ரயில் பாதை – கொழும்பு கோட்டை தொடக்கம் பொல்கஹவல, ரம்புக்கணை, கண்டி, கனேவத்த, மஹவ வரை சேவையில் ஈடுபடுவதுடன், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள எந்தவொரு ரயில் நிலையங்களிலும் ரயில்கள் நிறுத்தப்படமாட்டா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரு புதிய அமைச்சுக்கள் வர்த்தமானி அறிவித்தல்!

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு புதிய அமைச்சுகள், ஜனாதிபதியால் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சில மாற்றங்கள் ஏற்படும் என அரசாங்கத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு புதிய அமைச்சுகள், ஜனாதிபதியால் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, இலங்கையில் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், மேலும் சில அமைச்சுகளின் விடயதானங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஜனாதிபதி செயலகத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணி செயற்படவுள்ளது.

இதுவரையில், ஜனாதிபதி செயலகத்தின் கீழிருந்த இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், சிறிலங்கா ரெலிகொம் மற்றும் அதன் நிர்வாக நிறுவனங்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இதுவரையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் கீழிருந்த பொலிஸ் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த சிவில் பாதுகாப்பு திணைக்களம் என்பன புதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள புதிய அமைச்சான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

## கொழும்பு முழுவதையும் முடக்க அரசு தயாரில்லை!

கொழும்பு, நவ.24

கொழும்பில் முழுமையான முடக்கத்தை செயற்படுத்த அரசு தயாராக இல்லை என சுகாதார அதிகாரிகளை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறு முடக்குவது பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் முழுமையான முடக்கத்தை அமுல்படுத்த தயாராக இல்லை என்றும் மாறாக தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை மட்டும் தனிமைப்படுத்துவதன் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்த கொழும்பைச் சுற்றியுள்ள எல்லைகளைத் தற்காலிகமாக மூட வேண்டும் என்று கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்க சமீபத்தில் முன்மொழிந்தார்.

நகரத்தை கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால், வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பிரகாரம் நகரத்துக்கு வெளியே வைரஸ் பரவாமல் தடுக்க கொழும்பில் 14 முதல் 21 நாள்கள் முடக்க வேண்டும் என்றும் இந்தக் காலகட்டத்தில் கொழும்புக்குள் நுழையவோ வெளியேறவோ யாரையும் அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அடக்கு முறைகள் அதிகரிக்க தமிழர் உணர்வுகளும் கூடும்!

தமிழ் இனத்தின் மீது அடக்கு முறை கூடக்கூட தமிழ் மக்களின் உணர்வுகளும் பன்மடங்காகக் கூடிச்செல்லும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், 'எம் மாவீரர்களின் கனவு நிறைவேறும் வரைக்கும் எங்களுடைய போராட்டங்களையும் நினைவுகூரல்களையும் யாரும் தடுக்க முடியாது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரர் நிகழ்வு தொடர்பிலான நீதிமன்றத் தடையுத்தரவு மற்றும் வாகரை பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டமை தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலே மாவீரர் துயிலுமில்லங்களை பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் வருடாவருடம் எமது மாவீரர்களின் நினைவுகூரலை செய்வதற்காக மாவீரர் துயிலுமில்லங்கைளை அப்பிரதேச மக்களுடன் இணைந்து துப்புரவுசெய்து வருகின்றோம்.

கார்த்திகை 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதியில் வேறு நிகழ்வுகளைத் தவிர்த்து எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடி, அவர்களின் உயிர்களைத் தியாகம் செய்தவர்களை நினைவுகூருவதற்காக எமது மக்கள் ஆயத்தமாகிக் கொண்டிருப்பார்கள்.

அந்த அடிப்படையிலே இவ்வருடமும் வடக்கு கிழக்கிலே உள்ள தமிழ் மக்கள் தங்களின் உறவுகளை, மாவீரர்களை நினைவு கூருவதற்கான பணிகளை ஆரம்பிக்கின்ற வேளை பொலிஸார், இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்து நீதிமன்றத் தடையுத்தரவால் தடுத்தும் வருகின்றார்கள்.

அந்தவகையில், நேற்றுமுன் தினம் வாகரை மாவீரர் துயிலுமில்லத்தின் நிலைப்பாடு தொடர்பாக அறிவதற்காக நான் அங்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். அவ்வேளையில் அந்தத் துயிலுமில்லத்தைச் சூழ பொலிஸ் மற்றும் இராணுவம் குவிக்கப்பட்டு அங்கு யாருமே செல்லமுடியாத ஒரு நிலை காணப்படுகின்றது.

இருப்பினும் நான் அங்கு சென்று வருகின்ற வழியில் என்னை மாங்கேணியில் வைத்து வாகரைப் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றார்கள். இனிமேல் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கக் கூடாது, மக்களைத் தூண்டக் கூடாது என்றவாறு கடுமையான தொனியில் மிரட்டினார்கள். அதற்கான பதிலை அவர்களுக்குத் தெரிவித்தேன். பின்னர் சுமார் எட்டு மணியளவில் என்னை விடுவித்தார்கள்.

கெடுபிடிகள் மூலம் என்னை அடக்கலாம். ஆனால், எம்மக்களின், எமது இனத்தின் உணர்வை அடக்க முடியாது. எங்களது உணர்வுகளைத் தடுக்கத்தடுக்க மீண்டும் மீண்டும் உங்கள் மீது, உங்கள் இராணுவத்தின் மீது, அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் மீது சர்வதேச அழுத்தங்கள் கூடுமே தவிர என்றும் குறையாது.

எங்களை அடக்கி ஒடுக்க முற்படுவது முட்டாள்தனமான வேலை. எங்களைப் பொறுத்தவரையில் எத்தடைகள் வந்தாலும் வருடந்தோறும் எங்களுக்காக உயிர் நீர்த்தவர்களை நாங்கள் பூசிப்போம், அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம், அவர்களை நினைவுகூருவோம் அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இந்த நாட்டின் நீதித்துறை பெரும்பான்மை இனத்தை மையப்படுத்தியதாக இருந்தாலும் நாங்கள் எங்களது உரிமைகளை விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

எமது மாவீரர்களின் கனவு நிறைவேறும் வரைக்கும் எங்களுடைய போராட்டங்களையும், எமது நினைவுகூரல்களையும் யாரும் தடுக்க முடியாது. – என்று தெரிவித்தார்.

# சமூக வலைத்தளங்கள் மீது கட்டுப்பாடு விதிக்கவேண்டாம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் கூறுகிறார்



சமூக ஊடங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2021 வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அரசாங்கம் சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பவர்களை மௌனமாக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

கடந்த ஆட்சி சமூக வலைத்தளங் கள் மூலமாகக் கடுமையாக விமர்சிக் கப்பட்ட போதிலும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் அதற்காக எந்த வொரு தடைகளையும் விதிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'sir fail' என சமூக வலைதளங்களில் வெளியாகும் கருத்து எதிர்க்கட்சியால் உருவாக்கப்படவில்லை என்றும் இது பொது மக்களிடமிருந்து வெளிப்பட்டது என்றும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பொதுமக்கள் விரக்தியடைந் துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது, எனவே தற்போதைய அரசாங்கம் எதிர்காலத்திலும் கடுமையான விமர்சனங்களை எதிர்பார்க்க வேண்டும் என்றும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

# 24 மணி நேரத்தில் 428 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 428 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 497 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 171 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 587 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 462 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 87 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு சூறாவளி, கனமழை எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கரையோர பகுதிகள் இன்னும் 24 மணிநேரத்தில் சூறாவளியால் மாற்றம் அடைவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டல ஆராய்ச்சி திணைக்கத்தின் யாழ்.பிராந்திய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இதனால் காற்றின் வேகம், கடும் மழை, இடி, மின்னல் தாக்கங்களில் இருந்து பொது மக்களும் கடற்றொழிலாளர்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர் –

தற்போது வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்தம், எதிர் வரும் 6 மணித்தியாலங்களில் தாழமுக்க வலயமாக மாற்றமடையும் சாத்தியம் உள்ளது. இது 24 மணித்தியாலங்களில் சூறாவளியாக மாற்றமடையக்கூடிய சாத்தியமும் உள்ளது.

இது தற்போது வடமேற்கு திசையாக நகர்ந்து, இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரத்தை அண்மிக்கும் சாத்தியக் கூறு உள்ளது.

இதனால் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் கடும் மழை, சில இடங்களில் 100 தொடக்கம் 150 மில்லிமீற்றர் மழையும் பெய்யக்கூடும்.

இதுமட்டுமல்லாமல் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆங்காங்கே மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது. மேலும் காற்றானது சில பிரதேசங்களில் 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வரையான வேகத்தில் வீசும்.

எனவே இடி, மின்னல் தாக்கம் ஏற்படும் வேளைகளில் அத்தாக்கங்களில் இருந்து பாதுகாப்பாக இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்களை அறிவுறுத்துகின்றோம்.

தாழமுக்கம் காரணமாக புத்தளத்தில் இருந்து பொத்துவில், மட்டக்களப்பு, திருகோணமலை, காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கடல் பரப்புக்களில் ஆங்காங்கே பலத்த மழை பெய்யும்.

காற்றின் வேகமும் 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வரை அதிகரித்து காணப்படும். அவ்வாறான வேளைகளில் கடல் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே பொது மக்களும் கடற்றொழில் சார்பானவர்கள் மற்றும் மீனவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தற்போது திருகோணமலையில் இருந்து 425 கிலோ மீற்றருக்கு அப்பால் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்தம் 6 மணித்தியாலங்களில் தாழமுக்கமாக மாற்றமடையும். 24 மணிநேரத்தில் சூறாவளியாக மாறி வடமேற்காக நகரவுள்ளது.

இதனால் ஏற்படவுள்ள கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீடுகளுக்கு முன்பாக ஒளித்தீபம் ஏற்றுங்கள்!

## மயூரன் கோரிக்கை

வீடுகளுக்கு முன்பாக ஒளி தீபம் ஏற்றி, சிவப்பு மஞ்சள் கொடிகளைக் காட்சிப்படுத்தி உணர்வுபூர்வமாக மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறு முன்னாள் வட.மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவீரர் தினத்தை நடத்துவதில் ஏற்ப்படுத்தப்படும் தடைகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைத் தடுக்கும் விதத்தில் பேரினவாத அரசு, நீதிமன்றத்தின் ஊடாகவும் படையினர் ஊடாகவும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இதன்மூலம் உயிரிழந்தவர்களை அஞ்சலிப்பதை சட்டரீதியாகத் தடுக்கும் கீழ்த்தரமான நாடாக இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

நினைவேந்தல் நிகழ்வுக்கு சுகாதார நடைமுறைகளைக் காரணம் காட்டும் இந்த அரசு, வைரஸ் தாக்கம் அதிகரித் திருந்தபோது ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்தில் போர் வெற்றி விழாவை கடந்த மே மாதம் கொண்டாடியது. இதுதான் இலங்கையின் நீதியா?

நாட்டில் எந்த அபிவிருத்தியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாத பேரினவாத அரசுகள், தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப் பாட்டை மாத்திரம் மூலதனமாக வைத்து அரசியல் இலாபடைமடைந்து வருகின்றது.

இதனை பேரினவாதிகள் உணராத வரையில் இந்த நாடு முன்னேற்றமடைவதற்கான வாய்ப்புகள் துளி அளவேனும் இல்லை.

எத்தகைய அடக்குமுறையையும் தகர்த்து நினைவேந்தல் உரிமையை அனுஷ்டிக்கும் கடப்பாடும், பொறுப்பும் ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் காணப்படுகின்றது.

எனவே, இம்முறை மாவீரர் நினைவேந்தல் நிகழ்வை வீரகாவியமடைந்தவர்களின் பெற்றோர்களும், அவர்களது உறவினர்களும் மாத்திரம் அஞ்சலிப்பதை தவிர்த்து, இலங்கையின் வடக்கு கிழக்கு மலையகத்தை சேர்ந்த ஒட்டு மொத்த தமிழ்மக்களும், புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களும், இளைஞர்களும் பேரெழுச்சியுடன் அனுஷ்டிக்கவேண்டியதார்மீகப்பொறுப்பையும், கடமையையும் கொண்டுள்ளனர். இதனூடாக தமிழர்களின் தீராத தாகமாகவுள்ள இன விடுதலைபற்றியும், விடுதலைப்போராட்டம் பற்றியும் எதிர்கால சந்ததிகள் அறியும் நிலையை ஏற்படுத்த முடியும்.

எனவே, எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை, அனைத்து தமிழ் மக்களின் வீடுகளுக்கு முன்பாக ஒளிதீபம் ஏற்றி, சிவப்பு மஞ்சல் வர்ணக்கொடிகளை காட்சிப்படுத்தி விடுதலைப்போரின் வீர மறவர்களுக்கு, அஞ்சலியைச் செலுத்த வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலையகத்தில் நகர அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் நடவடிக்கை!

மலையகத்தில் பிரதான நகரங்களான ஹட்டன், மஸ்கெலியா, கொட்டகலை, தலவாக்கலை ஆகிய நகரங்களை அபிவிருத்தி செய்ய தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் நேற்று (திங்கட்கிழமை) இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது, ஹட்டன் ரயில் பாதை பகுதியில் நிர்மானிக்கப்படும் கட்டடத்தொகுதி மற்றும் பழைய மார்கட் தொகுதி, தலவாக்கலையில் உள்ள சந்தை தொகுதி, மஸ்கெலியா நகரம், கொட்டகலை கொமர்சல் பகுதியில் இடைநிறுத்தப்பட்ட நடைபாதை பூங்கா ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதனையடுத்து இது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று மதியம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறித்த பிரதேசங்களுக்கு சென்று களநிலவரங்களை ஆராய்ந்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், ஹட்டன் டிக்கோயா நகர சபை தலைவர் மற்றும் உப தலைவர் உள்ளிட்ட பலர் அமைச்சரோடு உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இரட்டைப் படுகொலை வழக்கு பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுசெயலாளர் பூ.பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) இணையத்தின் ஊடாக இடம்பெற்ற போதே நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அதற்கமைய பூ.பிரசாந்தனை எதிர்வரும் டிசெம்பர் 07 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன், 9 ஆம் திகதி காலை கொழும்பில் இருந்து சென்ற சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டார்.

ஆரையம்பதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தாமதமடைந்தாலும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம்!



## நீதி அமைச்சர் நாடாளுமன்றில் உறுதி

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஒருபோதும் தலையிட்டமை கிடையாது. தலையிடவும் மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

மேலும், நாட்டில் இருக்கும் பிரதான நீதிமன்றங்களான உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றுக்கு கடந்த 42 வருடமாக நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவில்லை. 20 ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு அதனை மேற்கொள்ள முடியுமாகி இருக்கின்றது. உயர் நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கையை 11 இல் இருந்து 17 வரையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கையை 12 இல் இருந்து 20 வரையும் அதிகரிக்க இருக்கின்றோம்.

உயர் நீதிமன்றத்துக்கான 6 நீதிபதிகளின் பெயர்கள் தற்போது ஜனாதிபதியால் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் அனைவரும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளாவர். இந்த விடயத்தில் ஜனாதிபதி மிகவும் நேர்மையாகவே செயற்படுகின்றார். அத்துடன் உயர் நீதிமன்றத்தில் 5 ஆயிரம் வழக்குகளும் மேன்முறையீட்டு நீதிமன்றில் 4 ஆயிரத்து 500 வழக்குகளும் விசாரிக்காமல் குவிந்திருக்கின்றன.

மேலும் கடந்த அரசாங்க காலத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழங்குகளில் இருந்து தற்போது அவர்கள் விடுதலையாகுகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். அவ்வாறு விடுதலையாகுவதில் ஆச்சரியமில்லை. ஏனெனில், காரணங்கள் எதுவும் இல்லாமலும் அரசியல் அடிப்படையிலும் அன்று வழக்குகள் தொடுக்கப்பட்டமையால் தற்போது விடுதலையாகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக பொய் வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதியின் 35 இற்கும் அதிக வழங்குகளில் நான் தனிப்பட்ட ரீதியில் ஆஜராகி இருந்திருக்கின்றமையால் இந்த விடயங்கள் எனக்கு தெரியும்.

மேலும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்தி இருக்கின்றார். ஏப்ரல் தாக்குதல்போன்று தொன்று இடம்பெறாமல் இருக்கும்வகையில், அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாகச் செயற்படுவதால் விசாரணைகளில் தாமதம் ஏற்படலாம். ஏனெனில் குற்றவாளிகள் குறுக்குவழிகளால் தப்பித்துக்கொள்ளவும் கூடாது. அதேபோன்று தாக்குதலுடன் சம்பந்தப்படாத அப்பாவிகள் தண்டனைக்கு ஆளாகவும் கூடாது என்பது முக்கியமாகும். இருந்தபோதும் குற்றவாளிகள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள்

எனவே நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்ற உறுதியை வழங்குகின்றேன். – என்றார்

## பொலிஸ்மா அதிபராக சீ.டி.விக்ரமரத்னவை நியமிக்க நாடாளுமன்றப் பேரவை அனுமதி!



பொலிஸ்மா அதிபர் பதவிக்காக தற்போது பதில் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்டு வரும் சீ.டி.விக்ரமரத்னவை நியமிப்பதற்கு நாடாளுமன்றப் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதியால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்காகப் பரிந்துரைக்கப்பட்ட 14 நீதியரசர்களை நியமிப்பதற்கும் பேரவை அனுமதி வழங்கியள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

### கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட

# பட்டிப்பளை சபை 'பட்ஜட்' ஏகமனதாக நிறைவேற்றம்



மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தவிசாளர் சி.புஷ்பலிங்கத் தால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அது ஏகமனதாக – 16 உறுப்பினர்களின் ஆதர வுடன் நிறைவேற்றப்பட்டது.

கட்சி பேதங்கள் இன்றி உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் வரவு – செலவுத்திட்டத்துக்கு வாக்களித்த சகல உறுப்பினர்களுக்கும் தவிசாளர் சி.புஷ்பலிங்கம் நன்றி தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புத் தொகுதியில் உள்ள போரதீவுப் பற்று (வெல்லாவெளி) பிரதேச சபை, மண்முனை தென்எருவில்பற்று (களுதாவளை), மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச சபை உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட மொத்தம் நான்கு பிரதேச சபைகளின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# 6 இளைஞர்கள் வாளுடன் கைது

யாழ்ப்பாணம், நவ.24

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் 6 இளைஞர்கள் வாளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 6 இளைஞர்களும் பயணித்த வாகனத்தைச் சோதனை செய்யும்போது வாள் ஒன்று மீட்கப்பட்டதாகவும், அந்த அடிப்படையில் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த இந்த 6 இளைஞர்களும் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எனவும் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட ஆறு பேரிடமும் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் அவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால்

# சு.க. வசமுள்ள செட்டிகுளம் பிரதேச சபை 'பட்ஜட்' இரண்டாவது தடவையும் தோல்வி

### தூக்கி வீசப்படுகின்றார் தவிசாளர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வசமுள்ள வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் இரு மேலதிக வாக்குகளால் இரண்டாவது தடவையாகவும் நேற்று தோல்வியடைந்துள்ளது.

செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் 5 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) சார்பில் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா பொதுஜன ஆகியன சார்பில் தலா ஓர் உறுப்பினர் என மொத்தம் 17 உறுப்பினர்கள் உள்ளனர்.

இதில், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (7 உறுப்பினர்களின் ஆதரவுடன்) ஆட்சியமைத்திருந்தது.

இந்நிலையில் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் மீது இன்று இரண்டாவது தடவையாக வாக்கெடுப்பு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (05), ஈ.பி.ஆர்.எல்.எவ். (03), தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி (01) என்பன ஒன்று சேர்ந்து (9 உறுப்பினர்கள்) வரவு – செலவுத் திட்டத்தை மீண்டும் தோல்வியடையச் செய்துள்ளன.

வரவு – செலவுத் திட்டத்தை ஆதரவாக 7 உறுப்பினர்களும், எதிராக 9 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மட்டும் நடுநிலை வகித்திருந்தார்.

இதன்மூலம் சபையின் தவிசாளரின் நம்பிக்கை கேள்விக்குட்பட்டுள்ளது. தவிசாளர் பதவி விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (100)

## நேற்றும் 3 கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே 87 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், நேற்று அறிவிக்கப்பட்டுள்ள 3 மரணங்களுடன், இதுவரை 90 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஒரு ஆணும் 2 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு மரணமடைந்தவர்கள் கம்பஹா – ஹெய்யந்துடுவ, கொழும்பு 15, கொழும்பு 14 பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

**88ஆவது மரணம்**

கம்பஹா மாவட்டம், ஹெய்யந்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த, 86 வயதான பெண் ஒருவர், கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணம், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உக்கிர நிலை என அறிவிக்கப் பட்டுள்ளது.

**89ஆவது மரணம்**

கொழும்பு 15, மட்டக்குளிப் பிரதேசத்தைச் சேர்ந்த, 60 வயதான ஆண் ஒருவர், கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அவ்வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணம், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட குருதி விசமடைந்தமை என அறிவிக்கப்பட்டுள்ளது.

**90ஆவது மரணம்**

கொழும்பு 14, கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த, 60 வயதான பெண் ஒருவர், மாரடைப்புக் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணம், மாரடைப்பு மற்றும் கொரோனாத் தொற்று நிலை என அறிவிக்கப்பட்டுள்ளது.

# காரைநகர் இறங்குதுறையில் ஆர்ப்பாட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

காரைநகர், நவ. 24

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காரைநகர் - ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பாதை சேவையை தடங்கல் இல்லாமல் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி காரைநகர் இறங்கு துறையில் நேற்றுக் காலை பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.





மேற்படி பிரதேசங்களுக்கு கடமை மற்றும் அத்தியாவசிய சேவை நிமித்தம் சென்று வரும் அலுவலர்களும் பொதுமக்களும் இப்பாதை சேவையூடாகவே பயணிக்கின்றனர். அண்மைக்காலமாக இப்பாதை சேவையில் அடிக்கடி தடங்கல் ஏற்பட்டு சேவை இடைநிறுத்தப்படுவதால் பயணிகள் பெருத்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

பாதை சேவை இடைநிறுத்தலுக்குரிய காரணங்களாக கேபிள் பழுது, வெளியிணைப்பு இயந்திரம் பழுது என்பன கூறப்படுகின்றன. ஆனால், இவற்றைச் சீர்செய்து பாதை சேவையை இடைநிறுத்தாது தொடர்வதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ளவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பாதை சேவையானது கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும், பெரும் அவலங்களுக்கு மத்தியில் படகு சேவை மூலம் ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்குச் சென்று வருவதாகவும் காரைநகர் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் காரைநகர் - ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு இடையே சீரான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்தித் தருமாறு வலியுறுத்தி இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு மகஜர் ஒன்றும் இன்று கையளிக்கப்பட்டுள்ளது.




# மாணவன் மீது துப்பாக்கிச் சூடு டாக்டருக்கு விளக்கமறியல்!

பாடசாலை மாணவன் ஒருவன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட - மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் - விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று நுகேகொட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் டிசம்பர் மாதம் 02ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மஹரகம எருவ்வல தர்மபால பாடசாலை மைதானத்தில் இந்த மாணவன் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அருகிலுள்ள வீட்டு வளாகத்திற்குள் வீழ்ந்த பந்தினை எடுக்க சென்ற போது வைத்தியரால் இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

சம்பவத்தில் 17 வயதுடைய மாணவன் ஒருவன் நெஞ்சுப்பகுதியில் தோட்டா பாய்ந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சம்பவம் தொடர்பில் மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கண்ணீர் அஞ்சலி

03 12 1977 — 23 11 2020



அமரர்
திருமதி ஜெயபாலன் மெரினாள்
(நிலானி)

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி ஜெயபாலன் மெரினாள் (நிலானி) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

வலயக் கல்விப்பணிப்பாளரும்,
அலுவலர்களும்
வலயக் கல்வி அலுவலகம், மடு

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1979.04.15
மதம் - இந்து V
நட்சத்திரம் - விசாகம் 2
பாவம் - 15
செவ் - 01இல்
கல்வி - A/L
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1975.05.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவாதிரை
பாவம் - 38
செவ் - -----
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம் இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir